பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆவணி 12 (28—8—72) திங்கள் வெளியூர்: ஆவணி 13 (29—8—72) செவ்வாய் [இதழ்: 63

அண்ணு பிறந்த நாளில் கோவில் செலவில் ஏழைகட்குத் திருமணம்

காஞ்சிபுரம், ஆக. 28—

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதசுவாமி கோயிலின் அறங்காவலர்கள், செப்டம்பர் 15--பேரறிஞர் அண்ணு பிறந்த நாளன்று ஏழைகளின் திருமணத்திற்கு நிதியுதவி அளிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

மணமகனுக்கும்-மணமகளுக்கும் புத்தாடைகள் வழங்கப்படும்; கோவிலின் செலவில் திருமணம் நடத்திவைக்கப்படும்.

கழகக் கட்டுப்பாடு குலைவதற்குத் தலைமையினர் இடந்தரமாட்டார்கள்

தவறு செய்வோர் யாராக இருந்தாலும் அவர்களை மன்னிப்பதற்கு இடமில்லை

பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கை கண்டிப்பாக பின்பற்றப்பட்டே ஆகவேண்டும்

ஜெயங்கொண்டம் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் அறிவிப்பு

ஜெயங்கொண்டம், ஆக. 28—

"திராவிட முன்னேற்றக் கழகம் இரத்தத்தில் விளைந்த பயிர்; இந்தக் கழகம் பலருடைய பெருமூச்சால் வளர்ந்த பயிர்; எதிர்ப்புகள் பலவற்றைக் கண்ட பயிர்; கல்லக்குடி கண்ட கழகம்--பாதுகாப்புச் சட்டங்களைச் சந்தித்திருக்கின்ற கழகம்--பல உயிர்களைப் பலி தந்த கழகம்; தீக்குளித்துச் செத்த தியாகிகள் பலரை உடையது இந்தக் கழகம்--உடையார்பாளையம் வேலாயுதம் போன்ற உத்தமர்களைப் பெற்றது இந்தக் கழகம்!

"இப்படிப்பட்ட கழகத்திற்கு ஊனம் ஏற்படுத்துகின்றவர்கள் யாராக இருந்தாலும்--என் மகனாக இருந்தாலும்--மன்னிப்பதற்கு நான் தயாராக இல்லை!

"திராவிட முன்னேற்றக் கழகம்--பொதுமக்கள் கையில் உள்ள குழந்தையாகும்; பொதுமக்களால் அது பாதுகாக்கப்படுகிறது. எனவே, மக்களின் கையிலே இருக்கின்ற கழகத்துக்கு ஊறு தேடுகின்றவர்கள் பகைப்புலமாக இருந்தாலும்--வெளியே இருந்து வந்தாலும்--உள்ளேயிருந்துகொண்டே முயற்சி செய்தாலும்--அவைகளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை பார்த்துகொண்டு சும்மாயிருக்காது!

"ஆளுங்கட்சியாக இருக்கின்ற நிலையிலிருந்து இறங்கி--எதிர்க் கட்சியாக மாறினாலும் கவலையில்லை; கழகத்தின் கட்டுப்பாடு குலைவதற்கு யார் தவறு செய்தாலும் தவறு செய்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக--சட்டமன்ற உறுப்பினராக--மாவட்ட, வட்ட, நகரச் செயலாளராக--அமைச்சர்களாக--யாராக இருந்தாலும், பார்த்துக் கொண்டிருக்க முடியாது!

"கட்டுப்பாடு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது கழகத்தின் திட்டவட்டமான கொள்கை என்பதை--கழகத் தலைவன்' என்ற முறையில்--இன்று பிரகடனப்படுத்துகிறேன்.

"184-ஆக இருப்பது 50-ஆகக் குறைந்தாலும்-80-ஆக ஆனாலும்--கழகத்திலே இருக்கின்ற இலட்சோபலட்சம் உறுப்பினர்களில் 4 இலட்சம் குறைந்தாலும்-15,000 கிளை அமைப்புகளில் ஓராயிரம் கலைக்கப்பட்டாலும் கவலையில்லை; எங்களுக்கு முக்கியம் கழகத்தின் கட்டுப்பாடுதான்!"

இவ்வாறு கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் திட்டவட்டமாக அறிவித்தார்.

உடையார்பாளையம் வட்ட தி.மு. கழகச் சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குத் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர்.

தோழர்கள் சிவப்பெருமான், எம். எஸ். வெங்கடாசலம், சின்னசாமி எம்.எல்.ஏ., பழனிவேலன் எம்.எல்.ஏ., சதாசிவம் எம்.எல்.ஏ., வி. மராங்குசம் எம்.எல்.சி., காமாட்சி எம்.எல்.ஏ., தெய்வீகன் எம்.பி., செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் திரண்டிருந்த பொதுமக்களை நோக்கியும்--முன்னிறுத்தியும் கலைஞர் அவர்கள் கூறியதாவது:—

"இங்கு நடைபெறுகின்ற இந்தப் பெருங் கூட்டம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வரவில்லை; ஆனால், என்னென்னவோ இங்கு நடந்ததாகப் பெரிதாகச் செய்திகளைப் போட்டிருக்கிறார்கள்.

நான்கூட, 'என்ன நடந்திருக்குமோ' என்ற கவலையுடன் இங்கு வந்தேன்; ஆனால் உங்களைப் பார்த்த நேரத்தில், அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்ததான சாயல் உங்கள் முகங்களில் இல்லை; அந்த அளவுக்குத் தெளிவாக நீங்கள், கழகத்தின்பால் உங்கள் அன்பைச் செலுத்துகிறீர்கள்!

கழகத்திற்குள் ஒருவருக்கு ஒருவர் ஏற்படுகின்ற போட்டி பற்றி நீங்கள் கவலைப்படமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் எங்கள் கையில் இல்லை; இதோ என் கண்ணெதிரில் இலட்சக் கணக்கில் திரண்டிருக்கின்ற உங்கள் கைகளில்தான்--பொதுமக்கள் கைகளில்தான் இருக்கிறது.

கழகத்தின் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கின்ற விதத்தில் நடைபெறுகின்றவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது ஒன்று உண்டு.

உடையார்பாளையம் வட்டச் செயலாளர் கணேசன் திருமண நிகழ்ச்சியையொட்டி வேறு சில நிகழ்ச்சிகளிலும் நான் கலந்துகொண்டு வருகின்றபோது வட்டக் கழகச் சார்பில் இந்தக் கூட்டம் ஏற்பாட்டிருக்கிறது.

நகர தி. மு. கழகத்தினர், 'நாங்கள்தான் கூட்டம் போடவேண்டும்' என்று கூறுவது, நியாயமான கேள்வியும் கூட! கூட்டத்தில் நான் கலந்துகொள்வது பற்றி வட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்படுகின்றபோது, வட்ட தி. மு. கழகமும்--நகர தி. மு. கழகமும் ஒன்றாகச் சேர்ந்தே அந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும்' என்று அறிவிக்கப்படுகிறது; உடனே வட்டக் கழகத்திலிருந்து தலைமைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டு--பின் அவர்கள் எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள்.

'வட்ட தி. மு. கழகமும்--நகர தி. மு. கழகமும் இணைந்து நடத்தினால்தான் வருவேன்; இல்லாவிட்டால் வரமாட்டேன்'' என்றும் அறிவிக்கப்படுகிறது; அதன் பின் கூட்டம் நடத்தப்படுகிறது; கலந்து கொள்கிறேன்; அவர்களும் இணைந்தே துண்டு அறிக்கை போடுகின்றனர்.

அப்படி அறிவிக்கப்பட்ட பிறகு, நகர தி. மு. கழகத்தினர் எதிர்ப்பு--உண்ணாநோன்பு ஆகிய நிலைகளை மேற்கொள்ளுகின்றனர் என்றால், நான் சொல்லிக் கொள்கிறேன்--பொதுச்செயலாளர் நாவலர் அவர்களை இன்று கலந்துகொண்டுதான் இதைச் சொல்லுகிறேன்--உண்ணாநோன்பு இருந்த தோழர்கள் அனைவரும் கழகத்திலிருந்து--விசாரணை முடிகின்ற வரையில்--தள்ளிவைக்கப்படுகிறார்கள்' என்று!

கழகம் கட்டுப்பாடு அற்றமுறையில் போவதை யாரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!

"குறைகளிருந்தால் எங்களிடம் நேரில் பேசுங்கள்--எங்களிடம் விளக்குங்கள்; அதை விட்டு விட்டு, கட்டுப்பாடு குலையும் விதத்தில் நடந்து கொள்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் கழகத்தைப் பகைவர்களுக்குக் காட்டிக் கொடுக்கின்ற முதல் விரோதிகளாவர்!

இன்றைய என் பேச்சு கழகத்தைக் கட்டிக் காப்பதற்கு அமையும் பேச்சாக நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

வருத்தம் தெரிவித்தனர்

இந்தக் கூட்டம் முடிந்தபின், கழகத் தலைவர் கலைஞர் அணைக்கரையில் தங்கியிருந்தார்; அப்போது நகரச் செயலாளரும் உண்ணாநோன்பு இருந்தவர்களும் கலைஞரைச் சந்தித்துத் தங்களின் செய்கைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டனர்.

அவர்களிடம் கழகத் தலைவர் கலைஞர், 'உங்கள் செய்கைக்குச் சமாதானம் தெரிவித்துத் தலைமைக் கழகத்துக்கு எழுதி அனுப்புங்கள்; அது பின்னர் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.

ஐந்தாண்டுக் காலத்தில்.....

'10 இலட்சம் பேருக்குக் கண் ஒளி வழங்குவோம்'

முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

கல்லக்குடி, ஆக. 28—

'தமிழ்நாட்டில் 10 இலட்சம் பேர், சரியான முறையில் கண் பார்வை தெரியாதவர்களாக இருக்கிறார்கள்; அவர்களில், முதற்கட்டமாக ஓர் இலட்சம் பேருக்கு இந்த ஆண்டில் கண்ணொளி வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்; இதுவரையில் 54 433 பேர்களுக்கு இலவசக் கண் பரிசோதனை நடத்தப்பட்டிருக்கிறது.

'தமிழக அரசு ஏழை எளியவர்களின் இல்லங்களுக்குச் சென்று--அவர்களை அழைத்துவந்து கண் சிகிச்சை அளிக்கிறது; 10 இலட்சம் பேருக்கு ஐந்தாண்டுக் காலத்தில் கண் ஒளி வழங்குவோம் என்பது உறுதியாகும்- கண் ஒளி வழங்கினால் மட்டும் போதாது; வாழ்விலும் அவர்களுக்கு ஒளி வழங்க வேண்டும்''

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கண் சிகிச்சை முகாம் நிறைவு விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

இத்திங்கள் 20, 23, 25 ஆகிய மூன்று நாட்களில் கல்லக்குடியில் நடைபெற்ற முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி கண் சிகிச்சை முகாமில் 2 167 பேர் கண்ணொளி பெற்றனர்.

தமிழகத்தில் இதுவரையில்--தனி ஒரு முகாமில்--இத்தனை அதிகம் பேர் கண்ணொளி பெற்றது இதுவே முதலாவதாகும்.

கண்ணாடி வழங்கும் விழா

கண் சிகிச்சை பெற்ற அனைவருக்கும் கண்ணாடி வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு திரு. அன்பில் தர்மலிங்கம் எம்.எல் ஏ. தலைமை தாங்கினர்.

கல்லக்குடி தொழிற்சாலை நிர்வாகிகள் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

கண் சிகிச்சை பெற்றவர்கட்கு முதலமைச்சர் கண்ணாடிகள் வழங்கினர்.

விழாவில் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், டாக்டர் வெங்கிடசாமி ஆகியோர் உரையாற்றினர்.

அரசு வருவாயோ ரூ. 395 கோடி

ஊழியர்களுக்கும்--ஆசிரியர்களுக்கும் ஊதியமாக--அகவிலைப் படியாக அளிக்கப்படுவதோ ரூ. 190 கோடி

முதலமைச்சர் கலைஞர் தரும் உண்மை நிலை விளக்கம்

சென்னை, ஆக. 26—

"தமிழக அரசு பொதுவாக வரிப் பணத்தை எந்த அளவுக்கு அரசு ஊழியர்களுக்கும்--ஆசிரியர்களுக்கும் அளிக்கிறது என்ற கணக்கைத் தெரிந்துகொள்வது அவசியமாகும்; 1972-73 வரவு--செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, அரசு அலுவலர்களுக்கு ஊதியமாகவும்--அகவிலைப் படியாகவும் ஒதுக்கப்பட்ட தொகை ரூ 104.60 கோடி; ஆசிரியர்களுக்கு ஊதியத்திற்காக மானியத் தொகையாக தருவது ரூ. 75 63 கோடி; ஆகமொத்தம் ரூ 180.26 கோடி.

இந்தச் செலவில் அகவிலைப் படி உயர்வாக அண்மையில் அளிக்கப்பட்ட ரூ. 6 கோடி சேரவில்லை, மற்றும் அண்மையில் கொடுத்த ரூ. 5 கோடியும் இதில் சேரவில்லை; ஆக, ஊதியச் செலவையும்--இதையும் சேர்த்தால் செலவு ரூ. 190 கோடி ஆகிறது!

1972-73 ம் ஆண்டு மதிப்பீட்டின்படி வருவாய் கணக்கில் மொத்தச் செலவு ரூ. 395 கோடி; இந்த ரூ. 395 கோடியில் ரூ. 190 கோடியை நாம் அரசாங்க அலுவலர்களுக்கும்--ஆசிரியர்களுக்கும் ஊதியமாகவும், வேறு பல மானியங்களாகவும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் எண்ணிப் பார்த்தால், இந்த அரசு இதற்கு மேலும் விரிவாகச் செய்ய முடியுமா என்பதை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்ற எல்லாப் பிரிவினருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் நிதி ஒதுக்கல் மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினர்; மேலும் அவர் கூறியதாவது:—

எதிர்காலத்தை எதிர்க் கட்சியினர் உணர்ந்தால் ஊக்கம் தருவரா?

"இன்றைக்கும் சில இடங்களில் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன; சில பகுதிகளில் உண்ணாநோன்பு போன்ற காரியங்களில் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாணவர்களாக இருப்பவர்கள், எதிர்காலத்தில் வேலை பெறும் நேரத்தில் தங்களுக்கும் அந்த ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்களில் சிலர் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவைகள் எல்லாம் வருந்தத்தக்கது மட்டுமல்ல--நாட்டின் நன்மைக்காகச் சொல்வேன்--எந்தக் கட்சியினராக இருந்தாலும், அவர்கள் அதையெல்லாம் ஊக்கப்படுத்தினால், இன்றைக்கிருக்கின்ற நாங்கள் போய் நாளைய தினம் அவர்களே ஆள வருகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட சங்கடங்களைச் சந்திக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகத்தான் நேரிடும்; ஆகவே இதுபோன்ற காரியங்களுக்கு எதிர்க் கட்சியில் இருக்கின்ற யாரும் ஊக்கம் தரக்கூடாது.

நிரந்தரமாக்கப்படுவது நிச்சயம்

இராஜா ஐயர், பழகு தொழில் ஆசிரியர்களுடைய வேலைகளை நிரந்தரமாக்க வேண்டுமென்ற குறிப்பினைச் சொன்னர்; கிட்டத்தட்ட 4,000 பேர் பழகு தொழிலின் பணி புரிகிறார்கள்; இவர்களில் 2,000-த்துக்கு மேற்பட்டவர்கள் இதுவரையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள்; மீதமுள்ளவர்களை நிரந்தரமாக ஆக்குவதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு--அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள்.

ஆலய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

அறநிலைய ஆலயங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கருத்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் இங்கே குறிப்பிட்டார்கள்; இதுபற்றி நானும்--அறநிலையத் துறை அமைச்சரவர்களும்--அறநிலைய அதிகாரிகளும் கலந்து பேசியிருக்கிறோம்; அதற்கு ஏற்றதொரு முடிவினை, அவர்களும் மகிழத்தக்க அளவிற்கு எடுக்கப்படும்.

ஏசல்களைத் தாங்கிய எங்களுக்கு ஏது அச்சம்?

'கவரவப் பிரச்சினையாகச் சிலவற்றை அரசு கருதிய காரணத்தால் கிளர்ச்சிகள் நடைபெற்றன' என்று கூறப்படுவதற்கு ஆதாரமே கிடையாது; இந்த அரசு கவரவமில்லாத அரசு; ஆகவே, கவுரவப் பிரச்சினை பார்ப்பதற்கு அதற்கு இடமெங்கே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சமுதாயத்தில் நாங்கள் நீண்ட நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள்--இன்றைக்கு இந்த அமைச்சரவையில் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; எவ்வளவோ ஏசல்களையும், இழிமொழிகளை மேடைக்கு மேடை--ஏட்டுக்கு ஏடு நாங்கள் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டவர்கள்; அப்படிப்பட்டவர்கள் தான் இன்றைக்கு அமைச்சரவையில் இருக்கிறோம்.

ஆகவே, எங்களுக்கென்று ஒரு கவரவம் தனியாக இருப்பதாகவோ, அது காப்பாற்றப்பட வேண்டும் என்றோ என்றைக்கும் நாங்கள் எண்ணியதில்லை!

தியாகம் செய்ய என்றைக்கும் தயார்

நாங்கள் கட்டிக்காக்க வேண்டுமென்று விரும்பும் கவரவம்--தமிழ் நாட்டின் கவரவம்; தமிழ் மொழியின் கவரவம்; இந்திய நாட்டின் கவரவம்; நமது பண்பாட்டின் கவரவம்; இவைகளைக் காப்பாற்ற எங்கள் சொந்தக் கவரவத்தைக் கூட தியாகம் செய்ய இந்த அமைச்சரவையிலுள்ள அனைவரும் என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதை, இந்த மன்றத்தின் மூலம் நாட்டுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோரிக்கை இல்லாமலேயே கிளர்ச்சிகளை உருவாக்குவதா?

திடீர் திடீரென்று ஒரு கிளர்ச்சி, அறிவிப்பு இல்லாமல்--கோரிக்கை இல்லாமல்--அரசுக்கு அவகாசம் அளிக்காமல் உருவாகிவிடுமேயானால், அவைகளை எப்போதுமே பார்த்துக்கொண்டிருப்பது என்பது ஓர் அரசாங்கத்தினுடைய பொறுப்பாகவோ, கடமையுணர்வாகவோ இருந்திட இயலாது; ஆகவே, அரசாங்கம் நிதி கண்டிப்பாக இருந்திடல் வேண்டும்; இதனை, இன்றைக்கு மட்டுமல்ல--பல தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்; எனவே மனிதாபிமான உணர்வோடு பல பிரச்சினைகளை நாம் அணுகுகின்ற காரணத்தாலேயே, திடீர் திடீரென்று கிளர்ச்சிகளை உருவாக்குவது நல்லதல்ல!"

வரி தரும் மக்களையும் மனதிலிருத்த வேண்டாமா?

சென்னை, ஆக. 25—

"மக்கள் தரும் வரிப்பணத்தை அரசு ஊழியர்களுக்கு நாம் சம்பளமாகவே கொடுத்துக் கொண்டிருந்தால், பிறகு ஒரு நாள் மக்கள் கொதித்தெழுவார்கள்! ஆகவே வரி கொடுக்கும் மக்களையும் கணக்கில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"எடுத்ததற்கெல்லாம் போராட்டம்--கிளர்ச்சி--என்ற வகையில் தொடங்கி, 'ஊதியம் போதவில்லை--ஊதியம் போதவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தால், நாம் வருமானமாகப் பெறுகின்ற--அரசாங்கம் பெறுகின்ற பணம் அவ்வளவும் ஊழியர்களின் சம்பளமாகப் போய்விடும்; பிறகு நல்ல காரியங்களைச் செய்ய முடியாது என்பதை மனதில் கொண்டு அரசாங்க ஊழியர்களானாலும் சரி--அல்லது ஆசிரியர்களானாலும் சரி--அவர்கள் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

--முதலமைச்சர் கலைஞர் (சட்டப் பேரவையில்)

இரு ஆண்டுகளில் இந்தியா திரும்பித் தர வேண்டிய கடன்பாக்கி

ரூ. 824.90 கோடி எனத் தகவல்

புதுடில்லி, ஆக. 27—

"நான்காவது திட்டத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளில் (1972-73, 1973-74) உதவிக் குழு நாடுகளுக்கு இந்தியா அசலும்--வட்டியும் சேர்த்துத் திருப்பித் தரவேண்டிய கடன் தொகை 113 கோடி டாலர் (ரூ. 824 9 கோடி) ஆகும்"

என்று, மக்களவையில், நிதியமைச்சர் சவான் அறிவித்தார்.

"இந்தியா திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையில் எவ்வளவு தூரம் நிவாரணம் அளிக்க முடியும் என்பதை பல்வேறு நாடுகளிடமிருந்து கண்டறிய உலக பாங்கி முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது"

என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

"நிவாரணம் தர விரும்பாத சில நாடுகளுடன் இப்பிரச்னையை இந்தியா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளுமா?" என்று கேட்டபோது, 'நிவாரணத்துக்கான தேவைபற்றி அசிரத்தையாக இருக்கமுடியாது என்றபோதிலும், நிவாரணம் கோரி அந்த நாடுகளைக் கெஞ்ச முடியாது' என்றார்.

சென்னை - கோவையில் கார்டுகளுக்குத் தரப்படும் அரிசியின் அளவு அதிகரிக்கக்கூடும்

அரசின் முடிவு பற்றி அமைச்சர்

சென்னை, ஆக. 27—

"சென்னை, கோவை ஆகிய இடங்களில் வழங்கப்படும் அரிசியின் அளவு (அடையாளக் கார்டு வைத்திருப்பவர்களுக்கு) அதிகரிக்கப்படும்"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம், சட்டப் பேரவையில் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வயதுவந்த ஒவ்வொருவருக்கும் தற்போது ஒன்றரை கிலோவும், 12 வயது உட்பட்ட சிறுவர்கட்கு முக்கால் கிலோவும் 15 நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது; இனிமேல் வயதுவந்த ஒவ்வொருவருக்கும் 15 நாட்களுக்கு 2 கிலோவும், சிறுவர்களுக்கு ஒரு கிலோ வீதமும் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"கன்னியாகுமரி மாவட்ட எல்லை ஓரத்துக்குள்ளும் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் தனிப்பட்டவர்கள் அரிசி எடுத்துச் செல்வது முழு அளவு தடுக்கப்படும்."

கூடுதலாகக் கொள்முதல்

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"இந்திய உணவுக் கார்ப்பரேஷன் தஞ்சாவூர் மாவட்டத்தில் தங்களுக்கு உள்ள அரவை ஆலைகள்--உலர வைக்கும் ஆலைகள் ஆகியவற்றின் உதவியுடன் குறுவைப் பருவத்தில் சுமார் 40,000 டன் கொள்முதல் செய்ய இயலும் எனத் தெரிவித்துள்ளது; இது, கிட்டத்தட்ட 25,000 டன் அரிசிக்குச் சமமான அளவாகும்.

உற்பத்தியாளர்கட்கு நியாயமான குறைந்த விலை கிடைப்பதை செய்யும் வகையில், தேவையான அளவுக்கு உணவுப் பொருள் வழங்குக் கழகம் கூடுதலாகக் கொள்முதல் செய்யும்.

நியாய விலைக் கடைகளில் பருப்பு வழங்கத் திட்டம்

அரசு நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகளில் துவரம் பருப்பு விற்கப்பட்டு வருகிறது; விற்பனை ஆகும் அளவைக்கொண்டு இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படும்.

இந்திய உணவுக் கார்ப்பரேஷனிடமிருந்து கடலை--கடலைப் பருப்பு சப்ளை செய்யும்படிக் கேட்கப்பட்டுள்ளது; இது வந்து சேர்ந்ததும், அரசின் சில்லறை விற்பனைக் கடைகள்--நியாய விலைக் கடைகள் ஆகியவை மூலமாக அவை வழங்கப்படும்; இது குறித்து இந்திய உணவுக் கார்ப்பரேஷனுக்கு எழுதப்பட்டுள்ளது.

கோதுமைப் பொருட்கள்

அரசுக் கடைகள்--நியாய விற்பனைக் கடைகள் ஆகியவற்றில் உணவுப் பங்கீட்டு அட்டைகளைக் காட்டி, வீட்டு உபயோகத்துக்காகக் கோதுமைப் பொருட்களை வாங்கிக்கொள்ளலாம்.

பெரும் அளவில் இந்த உணவுப் பண்டங்களை வாங்குவோர், கடந்த கால உபயோகம் குறித்த புள்ளிவிவரங்களைக் காட்டி உணவுத்துறை அதிகாரிகட்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

உள்ளூர் நிலைமைகளை கருத்தில் கொண்டு மாவட்ட கலெக்டர்கள் அவசியம் என்று கருதினால், சர்க்கரை விற்பனை செய்யும் நியாய விலைக் கடைகள் மூலம் உசிதம்போல அரிசி வழங்கலாம்; பல்வேறு மாவட்டங்களில் அரசு கிடங்குகளில் தேவையான இருப்பு உள்ளது.

குறுவை அறுவடையின்போது எவ்வளவு நெல் அல்லது அரிசி கிடைக்கிறதோ அது அத்தனையையும் மத்திய உணவுக் கார்ப்பரேஷனும்--மாநில உணவு வழங்கு பங்கீட்டுக் கழகமும் வாங்கிக் கொள்ளும்."

பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை

தமிழக அரசின் திட்டம் பற்றி முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 26—

தமிழக அரசுப் பரிசுச் சீட்டுப் பற்றிச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும்--முதலமைச்சர் கலைஞர் அளித்த பதில்களும் வருமாறு:—

டென்னிஸ் (ப. காங்):—"பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்கப்படுவது தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளதா?"

முதல்வர்:—"ஆம்; பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் போட்டியைத் தவிர்க்கவும், அந்தப் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் வந்து குவிவதைத் தடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது; இந்த உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது; இந்த உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது."

பொன்னப்ப நாடார்:—"உயர் நீதிமன்ற வழக்கு விரைவில் தீர்வு செய்யப்பட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?"

முதல்வர்:—"அரசு உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்."

என். தர்மலிங்கம் (தி. மு. க):—"தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு எந்தெந்த மாநிலங்களில் தடை செய்யப்பட்டுள்ளது?"

முதல்வர்:—"மராட்டியத்தில் மட்டும் தடை செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்."

அப்துல் வகாப் (லீக்):—"ஏழை மக்கள், தங்களுக்குக் கிடைக்கும் வருவாயில் பெரும் பகுதியைப் பரிசுச் சீட்டு வாங்கப் பயன்படுத்துகிறார்கள்; மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதால் அரசின் வருமானமும் கூடுதல் ஆகியிருக்கிறது; ஆகவே, பரிசுச் சீட்டு விற்பனையைக் கைவிடும் எண்ணம் அரசுக்கு உண்டா?"

முதல்வர்:—"அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை; வரும் வருமானத்தை இழந்துவிட அரசு விரும்பவில்லை."

முத்துசாமி (தி.மு.க.):—"பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?"

முதல்வர்:—"இதற்காகத்தான் வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது; அங்கெல்லாம் பரிசுத் தொகை அதிகம்; அதைப் போல் ஆக்க யோசனை செய்யப்படும்."

கா. வேழவேந்தன் (தி. மு. க.):—"வெளி மாநிலங்களில் பரிசுப் பணத்தைத் தவிர, கார் போன்றவைகள் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன; அதைப்போல இங்கும் செய்யப்படுமா?"

முதல்வர்:—"என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றித்தான் ஆராய்ந்து வருகிறோம்."

தேவராசன் (தி. மு. க):—"மற்ற மாநிலங்களில் திரைப்பட நடிகைகளை வைத்து அதிருஷ்ட எண்களை எடுக்கிறார்கள்; அதைப் போல் இங்கும் செய்து விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

முதல்வர்:—"இங்கு, குலுக்கலைப் பற்றிப் பிரச்சினை எதுவும் வரவில்லை; விற்பனையை அதிகரிப்பது பற்றித்தான் பிரச்சினை."

குமாரசாமி (இ.காங்):—"பரிசுத் தொகையைக் குறைத்து--வாரம் ஒருமுறை குலுக்கல் நடத்த எண்ணம் உண்டா?"

முதல்வர்:—"மற்ற மாநிலங்களை விட நாம் பரிசுத் தொகையை அதிகம் பேருக்குப் பகிர்ந்து தருவதால்தான் விற்பனை அதிக அளவு இல்லை; ஆகவே, பரிசுத் தொகையைக் குறைத்து அடிக்கடி குலுக்கல் நடத்துவதால் விற்பனை அதிகமாகி விடாது."

தேவேந்திரன் (தி.மு.க.):—"பரிசுச் சீட்டுப் பரிசுத் தொகைக்கு அதிக வரி போடுவதால்தான் விற்பனை குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறதே--உண்மையா?"

முதல்வர்:—"அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்."

வீராசாமி (தி. மு. க):—"பரிசுச் சீட்டு வாங்குகிறவர்கள் மாதம் ஒருமுறை குலுக்கல் நடப்பதால் ஒரு மாதம் வரையில், 'பரிசு கிடைக்கும்' என்று கனவு காண்கிறார்கள்; இந்த நிலைமை மாற்ற 15 நாட்களுக்கு ஒருமுறை குலுக்கல் நடத்தப்படுமா?"

முதல்வர்:—"கனவு காண்பவர், ஒரு மாதம் கண்டால் என்ன--15 நாள் கண்டால் என்ன--எல்லாம் ஒன்றுதான்!"

வேளாண்மை விற்பனை வரித் திருத்தமசோதா--புதிய திருப்பம்

சென்னை, ஆக. 26—

வேளாண்மை வருமானவரித் திருத்த மசோதாவை, ஆய்வுக் குழுவின் பரிசீலனைக் குழுவுக்கு விட்டப்பட்டிருக்கிறது.

வேளாண்மை வரி விலக்கு அளவு 7-50 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்தப்பட்டது.

வருமான வரிவிலக்கு அளவு ரூ. 4 000த்திலிருந்து ரூ. 5,000 ஆக விதிக்கப்பட்டிருக்கிறது.

"ஐந்து ஏக்கர்வரை எந்தப் பயிரைப் பயிரிட்டாலும், அந்த விவசாயிக்கு வருமானவரி கிடையாது" என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

இந்த மசோதாவை, சட்டப் பேரவையில் அமைச்சர் ப. உ. சண்முகம் தாக்கல் செய்தார்; இந்தத் திருத்த மசோதாவின் முக்கிய அம்சங்களாவன:—

மலைப் பகுதியில் பயிரிடப்படும் வாழைப் பயிருக்கு வருமான வரி கிடையாது.

இதுவரையில், 7.50 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் வரி கட்டவேண்டும்--என்று சட்டத்தில் இருந்தது; இந்த அளவு இப்போது, 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்தப்பட்டுள்ளது; இதனால், 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்வரை நிலம் வைத்திருப்பவர்கள் வரி கட்ட வேண்டியதில்லை.

இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ப. உ. சண்முகம் கூறியதாவது:—

"விவசாயிகளுக்கு சலுகை காட்டுவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் விவசாய வருமான வரி மிகவும் குறைவாக விதிக்கப்பட்டுள்ளது; ரூ 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்குத் தமிழ்நாட்டில் வரி இல்லை; ஆனால், இந்திரா காங்கிரசு ஆட்சி நடத்தும் மைசூர் மாநிலத்தில் ரூ. 105 வரி கட்ட வேண்டும்."

என்று கூறி, கேரளம்--மைசூர் ஆகிய மாநிலங்களுடன் ஒப்பிட்டு, 'அந்த மாநிலங்களைவிட தமிழக அரசு விதித்திருக்கும் வேளாண்மைவரி விகிதங்கள் குறைவாகத்தான் இருக்கின்றன' என்றுகூறி, அதற்கான புள்ளி விவரங்களையும் அளித்தார்.

"இதிலிருந்து, எந்த மாநிலத்தில் விவசாயிகளைக் கசக்கிப் பிழிகிறார்கள் என்பதை அறியலாம்" என்று குறிப்பிட்டார்.

இந்தியத் துணைக்கண்டத்தில்...

அரசியல் சதுரங்கமாட செஞ்சீன முயற்சியா?

சிம்லா உடன்படிக்கைக்கு வேட்டு வைக்கிறதா?

ஐ.நா.-வில் வங்காள தேசம் இடம் பெற முடியாமல் செய்ததன் நோக்கமென்ன?

ஐ நா., ஆக. 28—

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சிலில் முதல் தட்வையாகச் செஞ்சீன ரத்து (வீட்டோ) உரிமையைப் பயன்படுத்தி, ஐ நா. அவையில் வங்காள தேசம் இடம் பெற முடியாமல் செய்துவிட்டது.

இந்தியத் துணைக்கண்டத்தில் நிலையான சமாதான உடன்பாடு ஏற்படுவதற்கு இயலாமல் போடப்பட்டுள்ள முட்டுக்கட்டைதான் இந்த ரத்து (வீட்டோ) உரிமையாகும்.

இந்தியாவுக்கும்--பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சிம்லா உடன்படிக்கைக்குச் செஞ்சீன வெடி வைக்கப் பார்க்கிறது; இதன் மூலம் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள நாடுகளில் அரசியல் சதுரங்கம் ஆட முயற்சிக்கிறது.

ஐ நா. அவையில் சேருவதற்கான வங்க தேசத்தின் மனுவைப் பரிசீலிப்பதைக் காலவரம்பின்றி ஒத்திவைக்கக் கம்யூனிஸ்டு சீன செய்த முயற்சி தோற்றுவிட்ட பிறகு, 'மனுவை வீட்டோ செய்வதுதான் புனித உரிமையாகும்' என்று சீனப் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

பீகிங்கில் ஏதேனும் மனமாற்றம் ஏற்பட்டாலன்றி, ஐ நா.-ல் வங்காள தேசம் இடம் பெற இயலாது; பாதுகாப்புக் கவுன்சிலின் ஒருமனதான சிபாரிசு இல்லாமல் ஐ நா.-வில் எந்த நாடும் சேர முடியாது.

ஐ நா.-வில் வங்காள தேசம் சேருவதை ஆதரிக்கும் இந்தியா--பிரிட்டன்--இரஷ்யா--யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளின் தீர்மானத்தை 11-நாடுகள் ஆதரித்தன; சீன மட்டும் எதிர்த்தது; கினி--சோமாலி லந்து--சூடான் ஆகிய மூன்று ஆப்பிரிக்க நாடுகளும் நடுநிலைமை வகித்தன.

"ஐ.நா-வில் வங்காள தேசத்துக்கு எதிராகச் செஞ்சீன ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளதன் மூலம், கடும் விளைவுகள் ஏற்படக்கூடிய ஒரு நிலையை அது உருவாக்கிக்கொண்டிருக்கிறது" எனக் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

"சீனவின் நடத்தை, பாகிஸ்தானிலுள்ள போர் வெறியர்களின் போக்கிற்கு ஏற்றதாக இருக்கிறது; இந்தியாவுடனும்--வங்காள தேசத்துடனும் சுமுக உறவை அவர்கள் விரும்பவில்லை" என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

"பாகிஸ்தானுக்கு இனிமேல்தான் சோதனைக் காலம் ஏற்படப் போகிறது; சிம்லா உடன்பாடு செயல்படுவதற்கு இந்தியத் துணைக் கண்டத்தில் சமாதான உறுதிப்பட வேண்டும்; அது சரிவரக் கைகூடுவதற்கு வங்க தேச அரசைப் பூட்டோ முதலில் அங்கீகரிக்க வேண்டும்; இது, தவிர்க்க முடியாததோர் நிலையாகும்; செய்ய வேண்டிய ஒன்றை அவர் தாமதப்படுத்திக்கொண்டிருப்பாரானால், பாகிஸ்தான் மீது சீனவின் பிடி நிச்சயம் இறுகியே தீரும்; சமாளிக்க இயலாத நிலைமைகள் பாகிஸ்தானில் எழக்கூடும்" என்றெல்லாம் அரசியல் வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

அரசினர் தோட்டத்தில் 10 மாடிக்கட்டடங்கள்

தமிழக அரசு ஆலோசனை

சென்னை, ஆக. 26—

"சென்னை அரசினர் தோட்டத்தைச் சுற்றி--அண்ணா சிலையை நோக்கி கடைகளைக் கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?"

என்று, சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் தோப்பூர் திருவேங்கடம் வினவினர்.

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா:—"அண்ணா சிலையை நோக்கி அரசினர் தோட்டத்தில் 10 அடுக்கு மாடிக்கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது; இத்திட்டத்தின் படி, கீழ்ப்பகுதியில் கடைகளும், மேல் பகுதியில் அரசாங்க அலுவலகங்களும் இருக்க வசதியாக இந்தக் கட்டடம் கட்டப்படும்."

வீராசாமி (தி.மு.க.):—"10 மாடி கட்டடம் கட்டுவதற்குப் பதிலாக அந்த தோட்டத்தில் வரிசையாகக் கடைகளைக்கட்டி வாடகைக்கு விட்டால் அதிக வருமானம் கிடைக்கும்; இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?"

அமைச்சர்:—"10 அடுக்கு மாடி கட்டடத் திட்டம் தவிர வேறு மூன்றுதிட்டங்களும் அரசின் பரிசீலனையில் உள்ளன; 10 மாடி கட்டடத்தின் மேல் பகுதியில் அரசு அலுவலகங்களுக்கு இடம் கொடுப்பதால் தற்போது நகரில் பல வாடகைக் கட்டடங்களில் இருக்கும் அரசு அலுவலங்கள் அதன் மூலம் அரசுக்கு கணிசமான தொகை மிச்சப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

வாக்குரிமை பெறும் வயதை குறைக்கலாமா?

கருத்தறிவிக்குமாறு மத்திய அரசு கோரிக்கை

தமிழக அரசு நிலைபற்றி முதலமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 25—

"வாக்காளர்கள் வாக்குரிமை பெறும் வயதை 21-லிருந்து 18-ஆகக் குறைக்கலாமா என்று தமிழ்நாடு அரசிடம் கருத்துக் கேட்டு, ஏப்ரல் முதல் நாளன்று மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தது; இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்; இதன் தொடர்பாக உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும்--முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

என். கிட்டப்பா (தி.மு.க):—"வாக்கு அளிக்கும் தகுதி வயதை அமெரிக்காவில் குறைத்துவிட்டார்கள்; வேறு பல வெளிநாடுகளில் எல்லாம், குறைப்பது பற்றி ஆலோசித்து வருகிறார்கள்; 5 பொதுத்தேர்தல்களை வெற்றிகரமாக நடத்திவிட்ட இந்த நாட்டில், வாக்களிக்கும் தகுதி வயதை 21-லிருந்து 18-ஆகக் குறைக்க இந்த அரசு, மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யுமா?"

முதல்வர்:—"வாக்கு அளிக்கும் வயதை 21-லிருந்து 18-ஆகக் குறைப்பதைப் பற்றி மத்திய அரசு, மாநில அரசுகளின் கருத்தைக் கேட்டது; கேட்ட பிறகு, 'அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கில்லை' என்று மத்திய அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது; இப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்துவது எளிதாக இருக்கும்."

கே. டி. கே. தங்கமணி (வலது கம்.):—"நாடாளுமன்றத்தில் தனியார் தீர்மானம்தான் கொண்டுவரப்பட்டது; அதுபற்றி மாநில அரசின் கருத்து என்ன?"

கலைஞர்:—"1-4-72-ல் மத்திய அரசிடமிருந்து அதுபற்றிக் கடிதம் வந்தது; அதுபற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கும்போது இடையில் மத்திய அரசின் சட்ட அமைச்சர் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறியிருப்பதாகத் தகவல் வந்தது."

எச். வி. ஹண்டே:—"இதுபற்றி மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்து என்ன என்பது பற்றியும் அறியப்படுமா?"

கலைஞர்:—"மத்திய சட்ட அமைச்சர் இதுபற்றி நாடாளுமன்றத்தில் கூறியபோது, 'ஏற்கனவே அரசியலமைப்புச் சட்டத்தைப் பலமுறை திருத்திவிட்டோம்; திருத்தியதை முழுவதும் செயல்படுத்துவதே இயலாமல் இருக்கிறது; இந்த நேரத்தில் மேலும் அதைத் திருத்துவது உகந்தது அல்ல; அப்படி வயதைத் திருத்தினால் மேலும் 10 கோடி வாக்காளர்கள் அதிகமாவர்; அதற்குத் தக்கவாறு தேர்தல் செலவும் அதிகமாகும்; அதையொட்டிச் சிரமங்களும் அதிகரிக்கும்' என்று கூறியிருக்கிறார்; ஆகவே, இதுபற்றிய பிரச்சினைகளை முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டிப் பேசுவதே நல்லது."

பொன்னப்ப நாடார் (ப. காங்):—"நாடாளுமன்றத்தில் இடங்களை அதிகரிக்கப் போகிறார்கள்; அப்படியானால், ஏன் வயதைக் குறைக்கக்கூடாது? அதில் என்ன சங்கடம்?"

கலைஞர்:—"அந்தச் சங்கடத்தை மத்திய சட்ட அமைச்சர் விளக்கியிருக்கிறார்; இதைச் சொல்லுவதன் மூலம், '18 வயது என்ற வரம்பு வேண்டியது இல்லை' என்பது அல்ல."

மதுராந்தகம்--நகராட்சியாக மாற்றப்படும் நிலை

சென்னை, ஆக. 26—

"மதுராந்தகம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவது குறித்து அரசு யோசித்து வருகிறது; இப்போது உத்தேசிக்கப்பட்டுள்ள நகராட்சியோடு அதனைச் சேர்ந்த வேறு சில பகுதிகளைச் சேர்ப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் ஆர். ஆர். முனுசாமி கேள்விக்கு பதிலளிக்கையில், உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் கூறினர்.

மகளிருக்கும் சலுகை

புதுடில்லி, ஆக. 27—

கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காகச் செல்லும் பெண்கள், இனி கணவர்களின் ஒப்புதல் கடிதங்களைத் தாக்கல் செய்யத் தேவையில்லை; அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதில் தமது கணவருக்கு ஆட்சேபமில்லை என்று கூறினால் போதுமானதாகும்.

சுகாதார - குடும்பக் கட்டுப்பாடு அமைச்சர் பேராசிரியர் டி. பி. சட்டோபாத்தியாயா, இதனைத் தெரிவித்தார்.

மனைவியின் ஒப்புதல் கடிதம் இல்லாமல் அறுவைச் சிகிச்சையைக் கணவர் செய்துகொள்ளலாம் என்ற சலுகை ஏற்கனவே உள்ளது; தற்போது மனைவிக்கும் இத்தகையச் சலுகை கிடைக்கிறது.

சீரணித் தொண்டர்களின் சிறப்புமிக்க பணி

வேலைவாய்ப்புகளில் சலுகை தரப்படுமா?

சென்னை, ஆக. 28—

"சென்னை நகரில் அரசுப் போக்குவரத்துத் துறையில் பஸ் நிற்கும் இடங்களில் பணியாற்றும் சீரணித் தொண்டர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கான திட்டம் எதுவும் அரசிடம் உள்ளதா?"

என்று, சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பா வினவினர்.

அமைச்சர் எஸ்.ராமச்சந்திரன்:—"அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை."

என். கிட்டப்பா:—"சென்னை நகரில் சீரணித் தொண்டர்கள் இந்தத் துறையில் சிறப்பாகப் பணிபுரிகிறார்கள்; ஆகவே, போக்குவரத்துத் துறைக்கு ஆள் எடுக்கும்போது அவர்களுக்கு முதல் சலுகை தரப்படுமா?"

அமைச்சர்:—"சென்னை நகரில் சீரணித் தொண்டர்கள் சிறப்பாக பணியாற்றுகிறார்கள் என்பது உண்மைதான்; அதற்காக அவர்களை நிரந்தரமாக்க முடியாது; தகுதியிருந்தால் அவர்களுக்குப் போக்குவரத்துத் துறை வேலை வாய்ப்புகளில், முன் சலுகை அளிக்கலாம்."

வீராசாமி (தி.மு.க.):—"நெரிசல் நேரங்களில் பஸ் நிற்கும் இடங்களில் சீரணித் தொண்டர்களை அதிக அளவில் பயன்படுத்த அரசு முன்வருமா?"

அமைச்சர்:—"தற்போது 50 இடங்களில் சீரணித் தொண்டர் பணிபுரிகிறார்கள்; இன்னும் 25 சீரணித் தொண்டர்களின் பணியைப் பயன்படுத்திக்கொள்ள ஆலோசனை நடந்து வருகிறது."

‘வரி அமைப்பு முழுவதையும் மத்திய அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்’

‘உற்பத்திக்கும் உழைப்புக்கும் பொருந்தாத பணப் புழக்கம்--தடுக்க திட்டம் உருவாக்கப்படுவது அவசியம்’

கருத்தரங்கில் தொழில் அமைச்சர் செ. மாதவன் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 28—

“பணவீக்க நிலைமைக்கு இடந்தராத வகையில் வரி அமைப்பு முழுவதையும் மறுபரிசீலனை செய்வது அவசியமாகும்.

“பணவீக்க நிலைமை அல்லது விலை ஏறும் நிலையை வரி விதிப்பு முறை விளைவித்ததா என்று ஆராய வேண்டும்.

“விலைவாசிகளை நிலைப்படுத்த அவசரமாக--உருப்படியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

“பற்றுக்குறை நிதியீட்டு முறையைக் கட்டுப்படுத்தவும், உற்பத்திக்கும்--உழைப்புக்கும் பொருந்தாத பணப்புழக்கம் அதிகரிப்பதைத் தடுக்கவும், முன் யோசனையுடன் நீண்டகாலத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

“எந்தெந்த தொழில்கள் அரசுத் துறையில்--எந்தெந்தத் தொழில்கள் தனியார் துறையில்--எந்தெந்தத் தொழில்கள் கூட்டுறவுப் பிரிவில் இருக்கும் என்பதையெல்லாம் மத்திய அரசு தெளிவாகக் கூறவேண்டும்; இது தெரியாததால், புதிய தொழில்கள் துவங்கத் தயக்கம் காட்டப்படுகிறது.

“தமிழ்நாட்டில் திறமை வாய்ந்த தொழிலாளர் உள்ளனர்; தொழில் நுட்ப அறிவும் இருக்கிறது; மூலப் பொருள்கள்தான் கிடைக்கவில்லை; ஏற்றுமதிக்குரிய பொருள்கள் உற்பத்திக்கு ஏற்ற சூழ்நிலை இங்கு இருக்கிறது”

என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இந்துஸ்தான் வர்த்தகக் கழகத்தின் ஏற்றுமதி வளர்ச்சிக் கருத்தரங்குத் தொடக்க விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

தமிழ்நாட்டில் நல்ல வாய்ப்பு

அமைச்சர் செ. மாதவன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

“பெட்ரோலிய இரசாயனத் தொழிற்சாலை--மருந்துப் பொருட்கள் தயாரிப்பு--உரம்--எஞ்சினியரிங் தொழில்கள் ஆகியவற்றைத் தொடங்குவதற்குத் தமிழ்நாட்டில் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன; தேவையான வசதிகளும் இருக்கின்றன; இவற்றைத் தொடங்குவதன் மூலம் இந்தியாவின் ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும்; இதற்கு மத்திய நிதியமைச்சர் சவான் உதவிட வேண்டும்.

‘தொழில்களைத் தொடங்கினால் தேசியமயமாக்கி விடுவார்களோ’ என்ற அச்சநிலை காரணமாகத் தொழில் வளர்ச்சியில் ஒரு மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆகவே இது பற்றி ஒரு திட்டவட்டமான கொள்கையை மத்திய அரசு அறிவிக்க வேண்டும்; இதனால் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்த அளவில் மத்திய அரசு திட்டமான கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

மத்திய அரசின் நோட்டு அச்சடிப்பு--வரி விதிப்புக் கொள்கைகளில் நாட்டில் அதிக பணப் புழக்கம் உருவாகி விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது; இந்த பணவீக்க நிலை மாறும்விதத்தில் மத்திய அரசு தகுந்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வரி விதிப்பு கொள்கைகளில் துணிவான--தகுந்த மாற்றங்கள் செய்தால், விலைவாசி உயர்வை தடுக்க முடியும்; இதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

நோட்டு அச்சடிப்பைத் திருந்தபடி குறைத்து--நாட்டில் புழக்கத்தில் உள்ள அதிகப் பணத்தைத் திரும்பப் பெற்று--பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்.”

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கட்கு

வேலை வாய்ப்பு நிலைமை

சென்னை, ஆக. 28—

“சென்னை அடையாற்றிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு சரிவர கிடைக்கிறதா?”

என்று சட்டப் பேரவையில் கேட்கப்பட்டது.

முதல்வர்:—“இதில் படித்தவர்களில் பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருகிறது.”

கோவை செழியன்:—“இங்கு நடிப்புத் துறைக்கான பாடத் திட்டம் எதுவும் இல்லை; இந்த வசதி அளிக்கப்படுமா?”

முதல்வர்:—“தற்போது நடிப்பதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.”

நரசிம்மன் (தி. மு. க.):—“25 ஆண்டுகளாகக் குறிப்பிட்ட நடிகர்கள் நடித்த படங்களே வெளி வருகின்றன; அடையாறு கல்லூரியில் படித்த நடிகர்--நடிகைகள் நடித்த படங்கள் வெளிவர வசதியாகப் பயிற்சி அளிக்கப்படுமா?”

முதல்வர்:—“புதிய நடிகர்கள் வரவேண்டும் என்பதற்காகத் தான் நடிப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது; புதிய முகங்கள் குறித்த உறுப்பினரின் ஆவல் விரைவில் நிறைவேறும்.”

சவுந்திரபாண்டியன் (தி.மு.க.):—“ஆண்டுதோறும் இங்கு எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்?”

முதல்வர்:—“ஆண்டுக்கு 41 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்; தற்போது மொத்தம் 102 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.”

வீராசாமி (தி. மு. க.):—“நடிப்புத் துறையில் பெண்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?”

முதல்வர்:—“முதலில் நடிகர் பயிற்சி பெறட்டும்; மற்றதைப் பிறகு பார்க்கலாம்.”

திரைப்பட அரங்குகள் நாட்டுடைமையாகுமா?

“நாடக அரங்குகளைத் தேசியமயமாக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?”

என்று சட்டப் பேரவையில், சமக உறுப்பினர் தேவேந்திரன் வினவினார்.

முதலமைச்சர் கலைஞர்:—“அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.”

என். கிட்டப்பா:—“திரைப்பட அரங்குகளையாவது தேசியமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுமா?”

முதல்வர்:—“அப்படிப்பட்ட எண்ணமும் இல்லை.”

கோவை செழியன் (தி.மு.க.):—“அரசு உதவி பெறும் மியூசிக் அகடாமி அரங்கைப் பொறுத்த அளவிலாவது, தகுந்த கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முன் வருமா?”

முதல்வர்:—“தேவை இருந்தால் இது குறித்து அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.”

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] சென்னை-[illegible] [illegible]



தமிழக அமைச்சரவைத் துறைகளில் மாற்றம்

வேளாண்மை அமைச்சராக அன்பில் தர்மலிங்கம் பதவியேற்கிறார்

சென்னை, ஆக. 28—

தமிழ்நாடு அமைச்சரவைத் துறைகளின் மாற்றம் பற்றி ஆளுநர் மாளிகையிலிருந்து அறிக்கை ஒன்று வெளியாகியிருக்கிறது; முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஆளுநரைச் சந்தித்த பின், இந்த மாற்றங்கள் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அமைச்சராகி இருக்கிறார்; செப்டம்பர் 2-ம் நாளன்று பதவி உறுதிமொழி ஏற்கிறார்; முன்பு அவர் வகித்துவந்த வேளாண்மைத்துறை பொறுப்பையே இப்போதும் வகிப்பார்; அவருடன் சேர்த்து இப்போது அமைச்சர்களின் எண்ணிக்கை 15-ஆகிறது.

அமைச்சரவைத் துறைகளில் சில சிறு மாற்றங்கள் பற்றி முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் மதுவிலக்குத் துறை பொறுப்பை ஏற்கிறார்; இதுவரையில் அவர் வகித்துவந்த உணவுத் துறை பொறுப்பை மன்னை ப. நாராயணசாமி ஏற்கிறார்.

அமைச்சர் சி. பா. ஆதித்தனார், அனுமதிச் சீட்டுகள் (பாஸ்போர்ட்) – விலைகள் – விநியோகம் ஆகியவைகளின் சட்டப் பொறுப்புகளை ஏற்கிறார்.

இதுவரையில் சி. பா. ஆதித்தனார் கவனித்துவந்த கதர்--கிராமத் தொழில்--கிராமத் தொழில் திட்டம் ஆகியவைகளின் பொறுப்புக்களை மன்னை ப. நாராயணசாமி ஏற்கிறார்.

முதலமைச்சர் கலைஞர்

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பொது நிதித் திட்டம்--பொது நிர்வாகம்--ஐ.சி.எஸ். -- ஐ.ஏ.எஸ்-- மற்றும் மாவட்ட வருவாயத் துறை அதிகாரிகள் -- போலீசு-- தேர்தல் --செய்தித்துறை -- திரைப் படத் தொழில் சட்டம் -- திரைப் படத் தொழில் நுட்பம் -- பத்திரிகைத் தாள் கட்டுப்பாடு -- குடிநீர் வாரியம் -- குடிசை மாற்றுத் திட்டம் -- வெள்ளத் தடுப்பு நடவடிக்கைத் திட்டம் -- பால் வள நிறுவனம் ஆகியவற்றின் பொறுப்புக்களை வகிப்பார்.

ப. உ. சண்முகம்

அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், வருவாய்த்துறை -- மதுவிலக்கு -- வணிக வரி ஆகியவற்றின் பொறுப்புக்களை வகிப்பார்.

மன்னை நாராயணசாமி

அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள், உணவுத்துறை -- கதர் -- கிராமத் தொழில்கள் -- கிராமத் தொழில் திட்டங்கள் ஆகியவற்றின் பொறுப்புக்களை வகிப்பார்.

சி. பா. ஆதித்தனார்

சி. பா. ஆதித்தனார் அவர்கள், கூட்டுறவு--வேளாண்மை மறுநிதி உதவி -- வேளாண்மை இயக்குநரகத்தின்கீழ் உள்ள மண்வளப் பாதுகாப்பு தவிர்த்த விவசாயப் பொறியியல் பிரிவு -- பாஸ்போர்ட் -- விலைகள் -- விநியோகம் சம்பந்தமான சட்டம் ஆகியவற்றின் பொறுப்புக்களை வகிப்பார்.

கல்கத்தா தமிழ்ச் சங்கக் குழு சென்னை வருகை

சென்னை, ஆக. 28—

கல்கத்தாவில் இயங்கிவரும் அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கச் சார்பில் கொண்டாடப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழாவில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் கலந்து கொள்வதற்கு நேரில் அழைப்பு தர சங்கத் தலைவர் திரு. செ. வீரபத்திரன் தலைமையில் ஒரு குழுவினர் இன்று காலை சென்னை வந்து சேர்ந்தனர்.

சென்னையில் இக்குழுவினர் தங்கும் நான்கு நாட்களில், கல்வி அமைச்சர் நாவலர், தொழில்--சட்ட அமைச்சர் திரு செ. மாதவன், நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், திரு. அன்பில் தர்மலிங்கம் மற்றும் அமைச்சர்களையும், மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., சத்யா மூவீஸ் உரிமையாளர் திரு. ஆர். எம். வீரப்பன், மற்றும் வர்த்தக தொழில் பிரமுகர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்திக்க இருக்கின்றனர்.

நடிகர் சிவாஜி கணேசன் அவர்களைச் சந்தித்து அவருடைய அன்னையார் மறைவுக்கு வருத்தமும் ஆறுதலும் தெரிவிப்பர்.

வெண்ணிற ஆடை நிர்மலாவைச் சந்தித்து, கல்கத்தாவில் சங்கம் நடத்திவரும் இலவசப் பள்ளிக்கு நிதி திரட்டும் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வர்.

கல்கத்தாவில் வாழும் ஏழைத் தமிழர்களின் குழந்தைகள் கல்வி கற்கக் கல்கத்தாவில் சங்கச் சார்பில் முதன் முறையாகத் தமிழ் இலவசப் பள்ளி ஒன்று, அறிஞர் அண்ணா—நேதாஜி—முத்துராமலிங்கத் தேவர் தமிழ் இலவசப்பள்ளியைத் துவக்க சிவாஜி கணேசன் ரூ. 1,000 அளித்தார்; 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் நாள் வங்க முதல்வராக இருந்த அஜாய்குமார் முகர்ஜியால் அது துவக்கி வைக்கப்பட்டது.

“பாரத்” பட்டம் பெற கல்கத்தா சென்றிருந்த புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் இப்பள்ளியை நேரில் பார்வையிட்டு, இப்பள்ளியின் வளர்ச்சிக்காக ரூ. 2,000 நன்கொடை அளிப்பதாக அறிவித்துள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் 64-வது பிறந்த நாள் விழாவினைச் சிறப்பிக்கும் வகையில, ‘தமிழ் நாடு முன்னேறுகிறது’ என்ற மலரை சங்கத்தார் வெளியிடுகின்றனர்; பிற மாநிலங்களில் இயங்கிவரும் தமிழ்ச் சங்கங்கள் -- தமிழ் நாட்டின் முன்னேற்றம் ஆகியவை குறித்துச் சிறப்புமலர் வெளியிடுவது இதுதான் முதல் தடவையாகும்.

தமிழக அரசின் சார்பில் -- தமிழக முதலமைச்சரின் ஆங்கிலக் கட்டுரை ஒன்று இடம் பெறுவது மலரின் சிறப்பாகும்.

கல்கத்தா அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகளைப் பாராட்டும் வகையிலும் -- உற்சாகப்படுத்தும் வகையிலும் மத்திய அரசு, சங்கத்திற்கு வருமான வரி விலக்கு அளித்துள்ளது. 10—8—72 முதல் சங்கத்திற்கு நன்கொடை அளிப்பவர்களுக்கு அத்தொகைக்கு வரி கிடையாது.

மாணவர் இலக்கிய மன்ற தொடக்க விழா

29—8—72 பிற்பகல் 3-30 மணியளவில் சென்னை — இராயபுரம் சூரியநாராயண செட்டித் தெரு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் மாணவர் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெறும்; தலைவர்: பி. தங்கராசு எம்.சி.; பேசுபவர்: புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி.; பொருள்: ‘இலக்கிய இன்பம்’.